# கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

குடியாத்தம்- 635803

# 20-ஆம் ஆண்டு
# விளையாட்டு விழா

## 2019-2020

## தேதி : 11.03.2020

# கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## குடியாத்தம்

## 20-ஆம் ஆண்டு விளையாட்டு விழா

## 2019-2020

கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உயர்திரு. மேலாண்மை அறங்காவலர் அவர்களே, தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே மற்றும் பொருளாளர் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை புரிந்துள்ள **குடியாத்தம் நகர காவல் துணை கண்காணிப்பாளர் திரு.N.சரவணன்** B.Com அவர்களே, கல்லூரி முதல்வர் அவர்களே, கல்லூரி இருபால் பேராசிரியப் பெருமக்களே மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களே, கல்லூரியின் ஊன்று கோலாக விளங்கி கொண்டிருக்கும் மாணவ, மாணவிகளே பல துறையில் பயின்று கொண்டிருந்தாலும் விளையாட்டு துறையில் ஆர்வம் கொண்டு விளையாட்டுக்கு பெருமை சேர்க்கும் மாணவ, மாணவிகளே, ஊடக துறை நண்பர்களே மற்றும் வருகை புரிந்துள்ள விருந்தினர்களே அனைவருக்கும் மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2019-2020ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தலில் பெருமிதம் கொள்கிறேன். கல்வியாண்டின் துவக்கத்திலேயே விளையாட்டு வீரர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அதற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு இவ்வாண்டின் விளையாட்டுத் துறையின் நடவடிக்கைகள் துவங்கப்பட்டன.

குழுக்களும் அவற்றின் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | குழுவின் பெயர் | பொறுப்பு பேராசிரியர்கள் | பிரதிநிதிகள் |
|---|---|---|---|
| 1. | நீல குழு | பேரா.N. சுந்தரமூர்த்தி<br>நுண்ணுயிரியல் துறை | C. புருஷோத்தமன் - இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை<br>C. மோனிகா - இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை |
| 2. | பச்சை குழு | பேரா.B.வினோத்<br>கணிதவியல் துறை | R. சிலம்பரசன் - இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை<br>K. பிரியங்கா - இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை |
| 3. | வெள்ளை குழு | பேரா.S. கயல்விழி<br>கணினி அறிவியல் துறை | A. ஆகாஷ் - இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை<br>B. பாக்கியா - இளநிலை மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை |
| 4. | மஞ்சள் குழு | பேரா.S. சீமா<br>கணினிபயன்பாட்டியல் துறை | K. கார்த்திகேயன் - இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை<br>S. நிவேதா - இளநிலை மூன்றாமாண்டு பயன்பாட்டு வணிகவியல் துறை |

விளையாட்டுத்துறை செயலாளர்களாக ஜி. கணேஷ் முதுநிலை முதலாமாண்டு தகவல் தொழில்நுட்பவியல் துறை, எஸ்.ஞானசேகர் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மற்றும் ஆர். தாமரைக்கொடி இளநிலை முதலாமாண்டு உயிர்வேதியியல் துறையைச் சேர்ந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

விளையாட்டுத்துறையில் 2019-2020ஆம் ஆண்டு நம் மாணவர்கள் படைத்த சாதனைகளைப் பட்டியலிடுவதில் மகிழ்ச்சியுடன் பெருமையும் கொள்கிறேன்.

**தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- பி.சோபன்பாபு முதுநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை மற்றும் எஸ்.விஜயகுமார் முதுநிலை முதலாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர்கள் மைசூரில் உள்ள மைசூர் பல்கலைக்கத்தில் நடைபெற்ற தென்மண்டல பல்கலைக்கழக அளவிலான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றனர்.
- வி.தினேஷ் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறையைச் சார்ந்த மாணவர் சென்னையில் உள்ள இந்துஸ்தான் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனத்தில் நடைபெற்ற தென்மண்டல பல்கலைக்கழக அளவிலான மேசைப்பந்து போட்டியில் பங்கேற்றார்.

**அனைத்து கல்லூரிகளுக்கான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- கோ-கோ, கபாடி, இறகுப்பந்து, மேசைப்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், குத்துசண்டை, தடகளம், வலுதூக்குதல், பளுதூக்குதல் ஆகிய போட்டிகளில் நம் கல்லூரி அணிகள் பங்கேற்றன.
- ஏலகிரியில் உள்ள டான்பாஸ்கோ கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான மேசைப்பந்து போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் வி.தினேஷ் விநாயகம் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறை, கோபால் சுராஜ் கருணாகரன் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை, கே.ஜெகதீஷ் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மற்றும் ஆர்.குருண்குமார் இளநிலை முதலாமாண்டு வணிக ஆள்முறையில் துறையைச் சார்ந்த மாணவர்கள் இரண்டாம் இடத்தை பிடித்தனர்.

**மண்டல அளவிலான போட்டிகளில் நம் பங்கேற்பு :**

- வி.சங்கர் இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் திருப்பத்தூரில் உள்ள தூய நெஞ்சக் கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கிடையேயான கூடைப்பந்து போட்டியில் பங்கேற்றார்.

➢ கே.பிரகாஷ்ராஜ் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறையைச் சார்ந்த மாணவர் திருவண்ணாமலையில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கு இடையேயான கோகோ போட்டியில் பங்கேற்றார்.

➢ வி.தினேஷ்விநாயகம் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறையைச் சார்ந்த மாணவர் மற்றும் கோபால் சுராஜ் கருணாகரன் இளநிலை மூன்றாமாண்டு வணிகஆள்முறையில் துறையைச் சார்ந்த மாணவர் கடலூரில் உள்ள செயின்ஜோசப் கல்லூரியில் மண்டலங்களுக்கு இடையேயான மேசைப்பந்து போட்டியில் பங்கேற்று மூன்றாம் இடத்தை பிடித்தனர்.

➢ திருவண்ணாமலையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டாணைந்தில் மண்டல அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் கீழ்க்காணும் நம் மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

➢ டி.விக்ரம் இளநிலை இரண்டாமாண்டு வணிக ஆள்முறையில் துறையைச் சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் முதலிடமும், எஸ்.ஞானசேகர் இளநிலை முதலாமாண்டு ஈட்டி எறிதலில் இரண்டாமிடமும், வட்டு எறிதலில் மூன்றாமிடமும், ஒய்.நவீன்குமார் முதுநிலை இரண்டாமாண்டு தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த மாணவர் குண்டு எறிதலில் மூன்றாமிடமும் மற்றும் ஆர்.தீலிப் இளநிலை மூன்றாமாண்டு கணினிப் பயன்பாட்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் 110மீட்டர் தடை தாண்டுதலில் மூன்றாமிடமும் பெற்றனர்.

➢ கடலூரில் உள்ள பெரியார் கலைக் கல்லூரியில் மண்டலங்களுக்கிடையேயான ஆணழகன் போட்டிகள் நடைபெற்றன. அதில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். எஸ்.பி.ரூபேஷ்ராஜ்(85கிலோ எடைபிரிவில்) இளநிலை மூன்றாமாண்டு கணினிப்பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் முதலிடமும் மற்றும் ஆர்.சத்திய நாராயணன்(95கிலோ எடை பிரிவில்) இளநிலை மூன்றாமாண்டு கணினிப் பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் முதலிடம் பெற்றனர்.

**வெளி வளாகத்தில் நடைபெறும் போட்டிகளில் நம் மாணவர்கள் பங்கு :**

➢ வேலூரில் உள்ள நேதாஜி விளையாட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தடகள போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். எஸ்.ஞானசேகர் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் ஈட்டி எறிதலில் முதலிடமும் மற்றும் டி.விக்ரம் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் முதலிடமும், மும்முறை தாண்டுதலில் மூன்றாமிடமும் பெற்று இவர்கள் சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற மாநில அளவிலான ஈட்டி எறிதலில் மற்றும் நீளம் தாண்டுதலிலும் பங்கேற்றனர்.

➢ வேலூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான தடகளப் போட்டிகள் நேதாஜி விளையாட்டரங்கில் நடைபெற்றன. அதில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி

பெற்றனர். எஸ்.கணேஷ் முதுநிலை முதலாமாண்டு தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த மாணவர் கோலூண்றி தாண்டுதலில் முதலிடமும் எஸ்.ஞானசேகர் - இளநிலை கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் ஈட்டி எறிதலில் மூன்றாமிடமும், கே.உதயகுமார் இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் இரண்டாமிடமும், 100மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் ஆர்.திலீப் இளநிலை கணினிப் பயன்பாட்டு வணிகவியல் துறையை சார்ந்த மாணவர் இரண்டாமிடமும் மற்றும் ஆர்.சங்கீதா இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவி 800மீட்டர் ஓட்டத்தில் இரண்டாமிடமும் பிடித்தனர்.

- திருப்பத்தூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான தடகள போட்டிகள் நடைபெற்றன. அதில் நம் கல்லூரி மாணவர் எஸ்.பி. இம்ரான் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறையைச் சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் முதலிடம் பெற்றனர்.

- சென்னையில் நேரு விளையாட்டரங்கில் மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான தடகள போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.
    1. எஸ்.கணேஷ் - முதுநிலை முதலாமாண்டு தகவல் தொழில் நுட்பவியல் துறைச் சார்ந்த மாணவர் - கோலூண்றி தாண்டுதல்
    2. எஸ்.பி.இம்ரான் - இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறைச் சார்ந்த மாணவர் - நீளம் தாண்டுதல்

- வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கபாடி குழு போட்டியில் நம் கல்லூரி அணி மூன்றாம் இடத்தை பிடித்தனர். கீழ்க்காணும் எம் மாணவர்கள் சி.புருஷோத்தமன், பி.மணி, எஸ்.ஆகாஷ், ஆர்.விஸ்வா, ஆர்.ராஜா இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை, வி.சதீஷ்குமார், ஏ.ஆனந்தராஜ் இளநிலை மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறை, பி.கவின் இளநிலை முதலாமாண்டு வணிகவியல் துறை, பி.நந்தகோபால் இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியல் துறை எஸ்.அஸ்வின் குமார் இளநிலை இரண்டாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை வி.கோதண்டன் இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை மற்றும் கே.சுந்தர் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை.

- மதுரையில் நடைபெற உள்ள மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான கபாடி போட்டியிற்கு வேலூர் மாவட்ட கபாடி அணிக்கு கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் சி.புருஷோத்தமன் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறை, ஏ.ஆனந்தராஜ் இளநிலை மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறை, சி.கவின் முதலாமாண்டு வணிகவியல் துறை.

- வேலூரில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றன. அதில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். கே.யுகேந்திரபிரசாத் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறைச் சார்ந்த மாணவர் மற்றும் சி.தருண் இளநிலை முதலாமாண்டு வணிக ஆள்முறையியல் துறையைச் சார்ந்த மாணவர் வெள்ளிப்பதக்கமும், எஸ்.சோகித் மஞ்சுநாத் இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறைறைச் சார்ந்த மாணவர் மற்றும் ஏ.ராகுல் இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலத் துறையைச் சார்ந்த மாணவர்கள் வெண்கலப் பதக்கம் பெற்றனர்.
- வேலூரில் உள்ள சி.எம்.சி பாகாயம் விளையாட்டரங்கில் மாவட்ட அளவிலான தடகள போட்டியில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். எஸ். ஞானசேகர் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் ஈட்டி எறிதலில் இரண்டாமிடமும், வட்டு எறிதலில் மூன்றாமிடமும். எஸ்.பி. இம்ரன் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையியல் துறையைச் சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் முதலிடமும் மற்றும் டி.விக்ரம் இளநிலை இரண்டாமாண்டு வணிக ஆள்முறையியல் துறையைச் சார்ந்த மாணவர் நீளம் தாண்டுதலில் மூன்றாமிடமும் பெற்றனர்.
- வாலாஜாவில் உள்ள பிரைட்மிட்ஸ் வித்யாலயா சிபிஎஸ்இ பள்ளியில் மாவட்ட அளவிலான குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றன. அதில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். ஜி.யுவராஜ் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் வெள்ளிப்பதக்கமும், கே.யுகேந்திரபிரசாத் இளநிலை மூன்றாமாண்டு மற்றும் கே.பிரிதீவ்ராஜ் இளநிலை இரண்டாமாண்டு வணிக ஆள்முறையியல் துறையைச் சார்ந்த மாணவர்கள் வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.
- சேலத்தில் உள்ள எமரால்டு வாலி பப்ளிக் பள்ளியில் நடைபெற்ற தமிழ்நாடு உள்மாவட்ட அளவிலான மேசைப்பந்து கோப்பைக்கான போட்டியில் வி.தினேஷ் விநாயகம் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறையைச் சேர்ந்த மாணவர் பங்கேற்றார்.
- சென்னையில் உள்ள அமிர்தா வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற தேசிய அளவிலான மேசைப்பந்து போட்டியில் வி.தினேஷ் விநாயகம் இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல் துறையைச் சேர்ந்த மாணவர் மூன்றாமிடத்தை பெற்றார்.
- வேலூரில் உள்ள விஐடி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வதேச கலை மற்றும் விளையாட்டு விழாவில் எஸ்.பி.இம்ரான் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆண்முறையியல் துறையைச் சேர்ந்த மாணவர் தடகளப் போட்டியில் நீளம் தாண்டுதலில் முதலிடமும், மும்முறை தாண்டுதலில் மூன்றாமிடமும் பெற்றார்.

## நம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற போட்டிகள் :

பிற கல்லூரிகள் நம் வளாகத்தைப் பயன்படுத்தி விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் நாம் அனுமதி வழங்கியுள்ளோம்.

இந்த ஆண்டின் விளையாட்டு விழாவை ஒட்டி கீழ்க்காணும் போட்டிகள் நடைபெற்றன. கைப்பந்து, கூடைப்பந்து, கோ-கோ, கபாடி, பூப்பந்து, இறகுப்பந்து, கிரிக்கெட், சதுரங்கம், கேரம் மற்றும் தடகளப் போட்டிகள் மாணவர்களுக்கும், பந்து எறிதல், கேரம், சதுரங்கம், கோ-கோ, இறகுப்பந்து, கூடைப்பந்து மற்றும் தடகள போட்டிகள் மாணவிகளுக்கும் நடத்தப்பெற்றன. பேராசிரியர்கள் மற்றும் ஆசிரிரல்லாப்பணியாளர்களுக்கும் போட்டிகள் நடைப்பெற்றன.

போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் பெற்ற வெற்றி புள்ளிகள் அனைத்தும் அவர்கள் சார்ந்துள்ள விளையாட்டு குழுவிற்கு வழங்கப்பட்டு அதிக புள்ளிகள் எடுத்த மஞ்சள் குழுவை இவ்வாண்டின் விளையாட்டு வெற்றிக்குழுவாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 398

இவ்விளையாட்டுப் போட்டிகளில், நம் மாணவர் பெற்ற வெற்றி அனைத்திற்கும் தூண்டு கோலாகவும், வழிகாட்டியாகவும், வெளிச்சமாகவும் திகழும் நம் கல்லூரியின் மேலாண்மை அறங்காவலர், தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு விளையாட்டுத் துறைச் சார்பாகவும், முதல்வரின் சார்பாகவும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்போட்டிகள் சிறப்பாக நடைபெற எல்லா வகையிலும் உதவிய இக்கல்லூரியின் முதல்வருக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன். மாணவர் நலனில் இவர்கள் காட்டும் ஈடுபாடே, எந்த இடையூறும் இன்றி இவ்வாண்டின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறவும் வழிகோலியது.

விளையாட்டிற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய பேராசிரியப் பெருமக்களுக்கும், போட்டிகளை நடத்துவதில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்விழாவின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

சிறப்பு விருந்தினர்

11/03/2020

தலைவர்    செயலர்    முதல்வர் 11/03/2020    உடற்கல்வி இயக்குநர் 11/03/2020